**தேதி - 16.08.2022 அ.வ.எண்.221/2017 பி.சா.1 (மகாராஜன்)**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

03.09.2014ம் தேதியன்று வாதிக்கு இருசக்கரவாகனங்கள் 1ம் பிரதிவாதியால் சப்ளை செய்வதற்கு முன்பே 2ம் பிரதிவாதி வங்கியில் இருந்து 1ம் பிரதிவாதிக்கு ரூ.18,89,000 பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும், அது சம்பந்தமாக வாதியால் 18.09.2014 முதல் 31.10.2014 வரை எங்கள் வங்கிக்கு இ-மெயில் மூலம் பல புகார்கள் அனுப்பினார் என்றால் அந்த சமயத்தில் நான் பணியில் இல்லாததால் வங்கிக்கு இ-மெயில் மூலம் அனுப்பப்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது எங்களுடைய வங்கிக்கு வாதியால் அனுப்பப்பட்ட இ-மெயில் சம்பந்தப்பட்ட புகார்கள் என்று சொன்னால் நான் அப்போது பணியில் இல்லாததால் மேற்படி இ-மெயில் புகார் வந்ததா என்ற விபரம் எனக்கத் தெரியாது. மேற்படி இ-மெயில் புகாரானது எங்களது வங்கிக்கு delivery செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் பெறுநர் என்ற விபரத்தில் உள்ள முகவரி எங்களுடைய H.D.F.C. வங்கியுடையது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் இ-மெயின் புகாரானது எங்களது வங்கிக்கு delivery செய்யப்பட்டது என்றும், மேற்படி புகாரின் விபரங்கள் எனக்கு நன்கு தெரியுமென்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12.03.2014-ம் தேதியன்று வாதியின் அனுமதி இல்லாமல் 1ம் பிரதிவாதிக்கு எங்களது வங்கியில் இருந்து ரூ.23,72,000 அனுப்பப்பட்ட விபரம் எனக்குத் தெரியும் என்றும், தற்போது தெரியாது மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. Loan Agreement படி வாதியால் இருசக்கரவாகனங்கள் அவருக்கு கிடைக்கப் பெற்றவுடன் அவர் அந்த invoice-ஐ வங்கிக்கு அனுப்பிய பிறகு வங்கி பணத்தை 1ம் பிரதிவாதிக்கு விடுவிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். Loan Agreement படி வாதியால் invoice ஐ வங்கிக்கு அனுப்பி வாதி அனுமதி கொடுத்தவுடன் தான் 1ம் பிரதிவாதிக்கு பணம் விடுவிக்கப்பட்டது என்பதை காண்பிக்க எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவை 2013-2014 காலகட்டத்திய ஆவணங்கள் என்பதால் எங்களால் தாக்கல் செய்ய இயலவில்லை. பொதுவாக பிரச்சனை ஏற்பட்டுவிட்டால் அந்த கணக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வங்கியால் பாதுகாத்து வைக்கப்படும் என்று சொன்னால் நாங்கள் மூன்று வருடங்கள் தான் கணக்குகளை பாதுகாத்து வைத்திருப்போம். இந்த வழக்கில் இ-மெயில் சம்பந்தப்பட்ட புகார்கள் எங்களுக்கு வராததால் நாங்கள் சேமிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது எங்களது வங்கியால் வாதிக்கு அனுப்பப்பட்ட இ-மெயில் நகல் என்று

சொன்னால் என்னிடம் காண்பிக்கப்படும் பதில் இ-மெயில்கள் எங்கள் வங்கியால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபர்களிடமிருந்து அனுப்பப்பட்ட பதில் இ-மெயில் ஆகும் என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.14 மற்றும் 15** ஆகும். (3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணமானது குறியீடு செய்யப்பட்டது).

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.